ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1782/40 - 2012 නොවැම්බර් 02 වැනි සිකුරාදා - 2012.11.02
1782/40 ஆம் இலக்கம் – 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

**கறுவாத் தொழிலுக்கான சம்பளச் சபை**

*(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க கறுவாத் தொழிலுக்கான சம்பளச் சபையானது மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவினால் அதற்களிக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் தரப்பட்டுள்ள முறையில் அவ்வட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவாறான சபையின் அத்தகைய தீர்மானங்களை மாற்றுவதற்கு உத்தேசிக்கின்றதென இத்தால் அறிவிக்கின்றது.*

மேற்கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ஆந் நாளன்று நண்பகல் 12.00 மணி வரை சபையின் தவிசாளரினால் பெற்றுக் கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபணை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபணை எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகிறதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

வி. பி. பீ. கே. வீரசிங்க,
செயலாளர்,
கறுவாத் தொழிலுக்கான சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5.
2012, ஒற்றோபர் 23.

**அட்டவணை**

கறுவாத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டவையும், 1959, ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதிய 11732 ஆம் இலக்க இலங்கை அரசாங்கத்தின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டவையும், 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1664/24 ஆம் இலக்க வர்த்தமானியில்

வெளியிடப்பட்ட அறிவிப்பினால் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான முடிபுகள், அவ்வட்டவணையின் II ஆம் பாகத்தில், ஏற்கனவேயுள்ள பாகத்துக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பாகத்தை இடுவதன் மூலம், மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்:-

II ஆம் பாகம்

I ஆம் நிரலிற் குறிப்பிடப்பட்டுள்ள வேலையாளருக்கு இயைபுடைய நேரவேலைக்குரிய ஆகக்குறைந்த சம்பள வீதம் II ஆம் பந்தியில் அவ்வேலையாளருக்கு எதிரே குறிக்கப்பட்டுள்ள வீதமாகும்.

| நிரல் I<br>விபரம் | நிரல் II<br>ஆகக்குறைந்த சம்பள வீதம்<br>ரூ. ச. |
|---|---|
| **நேர வீதங்கள் - ஒரு நாளைக்கு** | |
| கிளைகள் வெட்டுதல், காண் வெட்டுதல், படி கட்டுதல், களை பிடுங்குதல்<br>இலுக்குப்புல்லை அகற்றுதல், எல்லைகளை துப்புரவு செய்தல் | |
| ஒரு ஆண்/பெண் வேலையாளிக்கு | 700.00 |
| **கறுவா உரித்தல் - ஒரு நாளைக்கு** | |
| ஒரு ஆண்/பெண் வேலையாளிக்கு | 1,000.00 |
| **துண்டு வீதம்** | |
| கிளை வெட்டுதல் - ஒரு ஹெக்டயருக்கு | 12,500.00 |
| காண் வெட்டுதல் - 18" X 18" கொண்ட 10 மீற்றர் காணுக்கு | 275.00 |
| வருடாந்தம் களை பிடுங்குதல் - ஒரு ஹெக்டயருக்கு | 17,500.00 |

11-717/1

---

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

### இறால் வளர்ப்பு, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழில் தொடர்பான சம்பளச் சபை

சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (136 ஆம் அத்தியாயமாகிய) 30ஆம் பிரிவினால் தனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, இவ்வட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்களை மேற்கொள்வதற்கு இறால் வளர்ப்பு, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழில் தொடர்பான சம்பளச் சபை உத்தேசிப்பதாக, சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்கூறிய தீர்மானங்களுக்கான ஆட்சேபனைகள் 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணி வரை இச்சம்பளச் சபையின் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

வி. பி. பீ. கே. வீரசிங்க,
தலைவர்,
இறால் வளர்ப்பு, வெளிநாடுகளுக்கு
ஏற்றுமதி செய்யும் தொழில்
தொடர்பான சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5,
2012, ஒற்றோபர் 23.

### அட்டவணை

இறால் வளர்ப்பு ,வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழிலுக்கான சம்பளச் சபையினால் தீர்மானிக்கப்பட்டதும், 1999 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 04 ஆந் திகதிய 1073/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், இறுதியாக 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1664/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் மூலம் வேறுபடுத்தப்பட்ட அட்டவணைக்கு பின்வரும் பகுதி உள்ளடக்கப்படுதல் வேண்டும். இறால் வளர்ப்பும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழிலுக்கான I ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள வேலையாளர்களுக்கு ஏற்புடையனவாகவுள்ள நேரவேலைக்கான ஆகக் குறைந்த திரட்டிய மாதாந்த சம்பள வீதங்கள் II ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ள வீதங்களாயிருத்தல் வேண்டும்:-

### பகுதி I

### தொழிலாளர் வகுப்பு

**தேர்ச்சிபெற்ற தொழிலாளர்கள் :**

சீமெந்து வேலை செய்வோர், தச்சு வேலை செய்வோர், நீர் வழங்குவோர், தாங்கிகளிலிருந்து நீரை வெளியேற்றுவோர், வடிகால் நீரை இறைக்கும் நிலையக் கட்டுப்பாட்டாளர், வடிகால் நீர் இறைப்போர், நீர் ஓட்டத்தைக் கட்டுப்படுத்துவோர், ஒட்சிசன் வழங்குவோர், வெப்பநிலையைக் கட்டுப்படுத்துவோர், உணவு, விற்றமின் மருந்துகளை வழங்குவோர், விலங்கு உணவுகளை வழங்கும் தொழிலாளர்/ களஞ்சியப்பொறுப்பாளர்கள், அறுவடைகளைப் பொறுப்பேற்போர்/களஞ்சியப் பொறுப்பாளர்கள், சரிபிழை பார்ப்போர் / தரக்கட்டுப்பாட்டை மேற்கொள்வோர், வெட்டுவோர், சுத்தம் செய்வோர், இறால்களை வகை (தரம்) படுத்துவோர், சரிபிழை பார்ப்போர், தாங்கிகளை அமைக்கும் தொழிலாளர்கள், அறுவடைகளைச் சேகரிப்போர், படகுகளைச் செலுத்துவோர் (படகு ஓட்டுநர்கள்) பொதிகள் செய்வோர், குளிரூட்டப்பட்ட அறைகளில் ஈடுபடுவோர்.

**ஓரளவு தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் :**

நிலத்தைச் செம்மையாக்கும் தொழிலாளர்கள், தாங்கிகளைக் காவல் காப்போர்/காவலாளர்கள், கயிறு இழுப்போர், முத்திரை பதிப்போர், செலோபேன் பைகளையும் காட்போட் பெட்டிகளையும் தயாரிப்போர், கல்வேலி அமைப்போரும், நடைபாதைகள் அமைப்போரும்.

**தேர்ச்சியற்ற தொழிலாளர்கள் :**

தாங்கிகளைச் சுத்திகரிப்போர், தாங்கிகளைப் பிராணிகளிடமிருந்து பாதுகாப்போர், குளிரூட்டப்பட்ட அறைகளைச் சுத்தம் செய்வோர் மேற்படி பந்திகளில் உள்ள வேலைகளுடன் தொடர்பான அல்லது அதனுடன் தொடர்பான அமய ஏதேனும் வேலைகளில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள்.

பின்வரும் தொழிலாளர்கள் இச்சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் தீர்மானங்களுக்கு உட்படமாட்டார்கள்:-

- 02.11.1945 ஆம் ஆண்டின் 9481 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள மோட்டார் போக்குவரத்துத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் அத் தொழிலில் குறித்துரைக்கப்பட்டவாறான நன்மைகளும் கொடுப்பனவுகளும் செய்யப்பட வேண்டும்.

- 07.01.1944 ஆம் ஆண்டின் 9224 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பொறியியல் தொழிலுக்கான சம்பளச் சபையில் (அதன் பின்னரான திருத்தங்கள்) குறிப்பிடப்பட்டுள்ள பொறியியல் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் அத்தொழிலில் குறித்துரைக்கப்பட்டவாறான நன்மைகளும் கொடுப்பனவுகளும் செய்யப்பட வேண்டும்.

- பின்வரும் தொழிலாளர்கள் இச்சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் தீர்மானங்களுக்கு உட்படமாட்டார்கள்:- எழுதுவினைஞர், காசாளர்கள், நேரப்பதிவாளர்கள், காவலாளர்கள்.

**பகுதி II**

| ஊழிய ஆண்டு | பயிற்சி<br>ரூபா ச. | இடைநிலைப்பயிற்சி<br>ரூபா ச. | பயிற்சியற்ற<br>ரூபா ச. |
|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 10,400.00 | 9,920.00 | 9,500.00 |
| 2 ஆம் ஆண்டு | 10,550.00 | 10,045.00 | 9,600.00 |
| 3 ஆம் ஆண்டு | 10,700.00 | 10,170.00 | 9,700.00 |
| 4 ஆம் ஆண்டு | 10,850.00 | 10,295.00 | 9,800.00 |
| 5 ஆம் ஆண்டு | 11,000.00 | 10,420.00 | 9,900.00 |

*11-717/2*

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**மட்பாண்டப் பொருட்கள் உற்பத்தித் தொழில்**

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 28ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க மட்பாண்டப் பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையானது மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவினால் அதற்களிக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் தரப்பட்டுள்ள முறையில் அவ்வட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவாறான சபையின் அத்தகைய தீர்மானங்கள் மாற்றுவதற்கு உத்தேசிக்கின்றதென இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ஆம் நாளன்று நண்பகல் 12.00 மணி வரை சபையின் தவிசாளரினால் பெற்றுக் கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

வி. பி. பீ. கே. வீரசிங்க,
தலைவர்,
மட்பாண்ட பொருட்கள் உற்பத்தித்
தொழிலுக்கான சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5,
2012, ஒற்றோபர் 23.

**அட்டவணை**

மட்பாண்டப் பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் தீர்மானிக்கப்பட்டதும், 1999 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதிய 1099/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையிற் தரப்பட்டவையும் காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டதும் இறுதியாக 2010 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 27 ஆந் திகதிய 1668/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான முடிவுகள் அவ்வட்டவணையிலிருந்து பின்வரும் பகுதியினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்பட வேண்டும்.

**தொழிலாளர் வகுப்பு**

**1. தேர்ச்சியுடையோர்** :

பிரிவுத் தலைவர்கள், நானாவித இயந்திர இயக்குநர்கள், வடிவமைப்போர், சார்ஜ் ஹேன்டர்ஸ் (charge handers) , போறணை இயந்திர இயக்குநர்கள், அடுப்பு (oven) இயக்குநர், சிரேஷ்ட மின்தூக்கி இயக்குநர், அச்சுருவங்கள் அமைப்போர், ஆராய்ச்சி உதவியாளர்கள், சிற்பங்களை அமைப்போர், படவரைஞர்கள், செவ்வை பார்ப்போர், மின்னுட்பவியலாளர்.

**2. ஓரளவு தேர்ச்சியுள்ளோர் :**

உதவி அச்சுருவங்களை அமைப்போர், நிறம் தீட்டுவோர் (ஸ்பிறே பண்ணுவோர், டிப்பர்ஸ்), தெரிவுசெய்வோர், கனிஷ்ட மின்தூக்கி இயக்குநர், மெருகூட்டுநர், பொதி செய்வோர், பொருட்களை சுத்தஞ்செய்வோர், ஸ்ரிக்கர்ஸ் ஒட்டுவோர், ஷவல் லோடர் (shovel loader) இயக்குநர், உதவி இயந்திர இயக்குநர், மின்சார உற்பத்தி இயந்திர இயக்குநர், உதவி அடுப்பு (oven) இயக்குநர்.

**3. தேர்ச்சியற்றோர் :**

சுத்திகரிப்போர், உதவியாளர்கள், சாதாரண வேலையாட்கள், தோட்ட வேலையாளர்கள், இவற்றையொத்த ஏனைய சேவைகளில் ஈடுபட்டுள்ளோர்.

**4. பயிலுனர்கள் :**

இரண்டு ஆண்டுகால பயிற்சி வரையறையின் கீழ் நானாவித துறைகளிலும் பயிற்சி பெறுவோர்.

**மாதமொன்றுக்கு வழங்கப்படவேண்டிய ஆகக்குறைந்த சம்பள அளவு**

| சேவை ஆண்டு | தேர்ச்சியுள்ளோர் ரூ. ச. | ஓரளவு தேர்ச்சித் திறனுள்ளோர் ரூ. ச. | தேர்ச்சித்திறன் அற்றோர் ரூ. ச. | பயிலுனர் ரூ. ச. |
|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 10,300.00 | 9,600.00 | 8,970.00 | 5,460.00 |
| 2 ஆம் ஆண்டு | 10,450.00 | 9,725.00 | 9,070.00 | 5,560.00 |
| 3 ஆம் ஆண்டு | 10,600.00 | 9,850.00 | 9,170.00 | |
| 4 ஆம் ஆண்டு | 10,750.00 | 9,975.00 | 9,270.00 | |
| 5 ஆம் ஆண்டு | 10,900.00 | 10,100.00 | 9,370.00 | |

11-717/3

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

**கற்குழி மற்றும் கருங்கல் உடைக்கும் தொழில்**

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க கற்குழி மற்றும் கருங்கல் உடைக்கும் தொழிலுக்கான சம்பளச் சபையானது மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு இதற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் அத்தகைய முடிபுகளை அவ்வட்டவணையிற் தரப்பட்டுள்ள முறையில் வேறுபடுத்துவதற்கு உத்தேசிக்கின்றதென இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணி வரை சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும் அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின் மீது எடுக்கப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

வி. பி. பீ. கே. வீரசிங்க,
தலைவர்,
கற்குழி மற்றும் கருங்கல் உடைக்கும்
தொழிலுக்கான சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5,
2012, ஒற்றோபர் 23.

### *அட்டவணை*

*கற்குழி மற்றும் கருங்கல் உடைக்கும் தொழிலுக்கான சம்பளச் சபையினாலாக்கப்பட்டு 2003 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 12 ஆந் திகதிய 1279/16 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரமான அறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே கூறப்பட்டுள்ளனவும், காலத்திற்குக் காலம் மாற்றப்பட்டனவும் 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1,660/35 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் கடைசியாக மாற்றப்பட்டனவுமான முடிபுகள் அவ்வட்டவணையின் II ஆம் பாகத்திற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பாகத்தினை இடுவதன் மூலம் மேலும் மாற்றப்படுதல் வேண்டும்:-*

### *பாகம் II*

### வேலையாளர் வகுப்பு

*கற்குழி மற்றும் கருங்கல் உடைக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள பின்வரும் வகுப்புக்களைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு நேர வேலைக்காக வழங்கப்பட வேண்டிய ஆகக் குறைந்த மாதாந்தச் சம்பளம் கீழே விளக்க அட்டவணையில் காட்டப்பட்டுள்ள அளவினதாயமைய வேண்டும்.*

*1.* ***பயிற்சி*** :

*கருங்கல் கையால் உடைப்போர், கருங்கல் இயந்திரத்தாலுடைப்போர், பாறைகளில் வெடிமருந்து நிரப்புவோர், தீயிடுவதன் மூலம் பாறைகளை வெடிக்கச் செய்வோர், பற்றரி மின்சக்தி மூலம் பாறைகளை வெடிக்கச் செய்வோர்.*

*2.* **ஓரளவு தேர்ச்சியுடையோர்** *:*

*கையால் கற்களைத் துண்டாடுவோர், இயந்திரங்கள் மூலம் பெரிய கற்களை சிறுகற்களாக உடைப்போர், கருங்கற்களை இயந்திரங்கள் மூலம் லொறிகளில் நிரப்புவோர், மெடல் கிரெசர் இயந்திரங்களுக்குக் கருங்கல் துண்டுகளைப் போடுவோர், மெடல் கிரெசர் இயந்திரங்கள் மூலம் கருங்கற்களை பல்வேறு அளவுகளில் உடைப்போர், உடைத்த கருங்கல் துண்டுகளை இயந்திரங்கள் மூலம் அகற்றுவோர், கருங்கற்துண்டுகளை இயந்திரங்கள் மூலம் குவிப்போர், கருங்கற் துண்டுகளை இயந்திரங்கள் மூலம் லொறிகளில் ஏற்றுவோர்.*

*3.* **தேர்ச்சியற்றோர்** :

*சுக்கைக் கற்களைச் சேகரிப்போர், கருங்கற்களைக் கைகளால் லொறிகளில் ஏற்றுவோர், தூள் கருங்கற் துண்டுகளைக் கையால்/சக்கர வண்டியால் அகற்றுவோர், கருங்கற் துண்டுகளைக் குவிப்போர். மேற்கூறப்பட்ட சகல பணிகளுடன் சம்பந்தப்பட்டவர்களும் அதற்குத் தொடர்புடைய பணிகளைச் செய்வோரும்.*

***ஆகக் குறைந்த மாதாந்தச் சம்பள வீதங்கள்***

| ஊழிய ஆண்டு | பயிற்சி<br>ரூபா ச. | இடைநிலைப் பயிற்சி<br>ரூபா ச. | பயிற்சியற்றோர்<br>ரூபா ச. |
|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 12,500.00 | 11,750.00 | 11,000.00 |
| 2 ஆம் ஆண்டு | 12,650.00 | 11,875.00 | 11,100.00 |
| 3 ஆம் ஆண்டு | 12,800.00 | 12,000.00 | 11,200.00 |
| 4 ஆம் ஆண்டு | 12,950.00 | 12,125.00 | 11,300.00 |
| 5 ஆம் ஆண்டு | 13,100.00 | 12,250.00 | 11,400.00 |

*11-717/4*

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

**பத்திரிகையாளர் தொழில்**

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க பத்திரிகையாளர் தொழிலுக்கான சம்பளச் சபையானது மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு இதற்கான அட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ள சபையின் அத்தகைய முடிபுகளை அவ்வட்டவணையிற் தரப்பட்டுள்ள முறையில் வேறுபடுத்துவதற்கு உத்தேசிக்கின்றதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்கூறிய உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணி வரைக்கும் சபையின் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும் அத்தகைய ஆட்சேபனைகள் எந்த ஏதுக்களின் மீது எடுக்கப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

வி. பி. பீ. கே. வீரசிங்க,
தலைவர்,
பத்திரிகையாளர் தொழிலுக்கான
சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5,
2012, ஒற்றோபர் 17.

### அட்டவணை

பத்திரிகையாளர் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, 1986 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதிய 411/19 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவையும் 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1660/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் இறுதியாக வேறுபடுத்தப்பட்டுள்ளவையுமான தீர்மானங்கள், அவ்வட்டவணையின் II ஆம் பகுதிக்குப் பதிலாக பின்வரும் புதிய பகுதியினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்:-

### பகுதி II

**விசேட தரம் :-** பிரதி பத்திரிகை ஆசிரியர், இணை பத்திரிகை ஆசிரியர், விசேட தரப் பத்திரிகை ஆசிரியர், பத்திரிகை ஆசிரியர் (நாளாந்தம்).

**தரம் I** வியாபாரப் பதிப்பாசிரியர், பிரதான உப பதிப்பாசிரியர், எழுத்தாளர் தலைவர், வெளிநாட்டுச் செய்திப்பதிப்பாசிரியர், தனிச்சிறப்பு கூறு பதிப்பாசிரியர், உள்ளூர் செய்திப்பதிப்பாசிரியர், விளையாட்டுப் பகுதிப் பதிப்பாசிரியர், மகளிர் பகுதிப் பதிப்பாசிரியர், பதிப்பாசிரியர் (வாராந்தம்), புகைப்படப் பதிப்பாசிரியர்.

**தரம் : II** உதவிப் பதிப்பாசிரியர், பிரதான புகைப்படப்பிடிப்பாளர், பிரதி எழுத்தாளர் தலைவர், தனிச் சிறப்புக் கூறு எழுத்தாளர், ஆசிரியர் தலையங்க உதவியாளர், நூலக உப பதிப்பாசிரியர், கேலிச் சித்திரக்காரர், மொழிபெயர்ப்பாளர், சிரேட்ட புகைப்படப்பிடிப்பாளர், சித்திரம் வரைவோர்.

**தரம் : III** நூலக உதவியாளர், செய்தி அறிக்கையாளர், புகைப்படப்பிடிப்பாளர், கனிஷ்ட உபபதிப்பாளர், ஒப்புநோக்குநர்

**மாதமொன்றுக்கான ஆகக்குறைந்த சம்பள வீதங்கள்**

| ஊழியர் ஆண்டு | விசேட தரம் | தரம் I | தரம் II | தரம் III |
|---|---|---|---|---|
| | ரூ. ச | ரூ. ச | ரூ. ச | ரூ. ச |
| 1 ஆம் ஆண்டு | 19,580.00 | 16,070.00 | 15,055.00 | 14,235.00 |
| 2 ஆம் ஆண்டு | 19,930.00 | 16,370.00 | 15,305.00 | 14,435.00 |
| 3 ஆம் ஆண்டு | 20,280.00 | 16,670.00 | 15,555.00 | 14,635.00 |
| 4 ஆம் ஆண்டு | 20,630.00 | 16,970.00 | 15,805.00 | 14,835.00 |
| 5 ஆம் ஆண்டு | 20,980.00 | 17,270.00 | 16,055.00 | 15,035.00 |
| 6 ஆம் ஆண்டு | 21,330.00 | 17,570.00 | 16,305.00 | 15,235.00 |
| 7 ஆம் ஆண்டு | 21,680.00 | 17,870.00 | 16,555.00 | 15,435.00 |
| 8 ஆம் ஆண்டு | 22,030.00 | 18,170.00 | 16,805.00 | 15,635.00 |
| 9 ஆம் ஆண்டு | 22,380.00 | 18,470.00 | 17,055.00 | 15,835.00 |
| 10 ஆம் ஆண்டு | 22,730.00 | 18,770.00 | 17,305.00 | 16,035.00 |
| 11 ஆம் ஆண்டு | | 19,070.00 | 17,555.00 | 16,235.00 |
| 12 ஆம் ஆண்டு | | 19,370.00 | 17,805.00 | 16,435.00 |
| 13 ஆம் ஆண்டு | | 19,670.00 | 18,055.00 | 16,635.00 |
| 14 ஆம் ஆண்டு | | 19,970.00 | 18,305.00 | 16,835.00 |
| 15 ஆம் ஆண்டு | | 20,270.00 | 18,555.00 | 17,035.00 |

தரம் III இல் உள்ள பயிலுநர் - 1 ஆம் ஆண்டு ரூபா 9,460.00

11-717/5

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.